Registered as a Newspaper
பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 280
சனிக்கிழமை 02 செப்ரெம்பர் 2023
ஆவணி 16 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## கியூ.ஆர். இனியில்லை!

கொழும்பு, செப். 2
எரிபொருள் விநியோகத்துக்காக அறிமுகம் செய்யப்பட்டிருந்த கியூ ஆர். முறை நேற்று முதல்
»11

## எரிவாயுவின் விலை மாறும்!

கொழும்பு, ஒக. 2
சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையில் திருத்தம் செய்யப்படவுள்ளதாக லிட்ரோ எரிவாயு
»11

### உழவியந்திரம்
## சாய்ந்து சிறுவன் சாவு!

வவுனியா, செப். 1
வவுனியா, பூவரசங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடுக்குளம்
»11

### காசோலை மோசடி
## இரண்டு பேர் கைது

யாழ்., செப். 2
யாழ்ப்பாணத்தில் இருவேறு காசோலை மோசடிகளில் ஈடுபட்ட
»11

### சுகாதார அமைச்சுக்கு முன்பாக
## மரணச்சடங்கினை நடத்தி கெஹலியவுக்கு எதிர்ப்பு!
### பதவி விலகக் கோரி ஒப்பாரி

கொழும்பு, செப். 2
சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உடன் பதவி விலகவேண்டும் என வலியுறுத்தி சுகாதார அமைச்சுக்கு முன்பாக நேற்று மாலை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
»11



# கோகர்ண விகாரைக்கு மேலேயே திருக்கேதீஸ்வரம் நிர்மாணிப்பாம்!
## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கண்டுபிடிப்பு

கொழும்பு, செப்ரெம்பர் 2
கோகர்ண விகாரையை அழித்து, அதன்மேலேயே திருக்கேதீஸ்வரம் அமைக்கப்பட்டுள்ளது. ஆதலால், 'திருக்கேதீஸ்வரத்தை 2 ஆயிரத்து 500 ஆண்டுகள் பழமையான ஆலயம்' என்று தனது ருவிற்றர் பதிவில் குறிப்பிட்டுள்ள அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் உடனடியாக மன்னிப்புக் கோரவேண்டும் – என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.
»11

## திருகோணமலையில் விகாரை; எதிர்த்து நாளை போராட்டம்!

திருகோணமலை, செப். 2
திருகோணமலை, பெரியகுளம் சந்தியில் தொல்லியல் திணைக்களத்துக்குச் சொந்தமான காணியில் விகாரை அமைப்பதற்கு எதிராகத் தமிழ்த் தேசியப் பேரவையின்
»11

## இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் இலங்கைப் பயணம் ஒத்திவைப்பு

கொழும்பு, செப். 2
இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் இரண்டு நாள்கள் பயணமாக இன்று இலங்கைக்கு வரவிருந்த நிலையில், அவருடைய
»11



## பஸ்ஸோடு கோபித்து கழன்று ஓடிய சில்லுகள்
### பயணிகள் அருந்தப்பு
### இ.போ.ச. பேருந்தின் நிலை

யாழ்ப்பாணம், செப். 2
பேருந்து ஒன்று பயணித்துக் கொண்டிருந்தபோது, அதன் சில்லுகள் தனித்துக் கழன்றுவந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் டிப்போவுக்குச் சொந்தமான, திருகோணமலை - யாழ்ப்பாணம் இடையிலான தூர சேவையில் ஈடுபடும் பேருந்திலேயே இந்த அசம்பாவிதம்
»11

## மட்டக்களப்பு - யாழ். 2024 இல் ரயில்சேவை

கொழும்பு, செப். 2
இந்தியக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் புதிய ரயில்களைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், யாழ்ப்பாணத்துக்கும் மட்டக்களப்புக்கும் இடையே ரயில் சேவைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. மட்டக்களப்பு மாவட்ட
»11

### உதயனுக்குள் புகுந்து அடாவடி;
## போதகருக்கும் கும்பலுக்கும் நீதிமன்றம் கடும் எச்சரிக்கை!
### தண்டம் விதித்து விடுவிப்பு

யாழ்ப்பாணம், செப். 2
உதயன் பத்திரிகை அலுவலகத்துக்குள் அத்துமீறி நுழைந்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்ட மதபோதகர் உட்பட 6 பேருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று தண்டம் விதித்தது.
»11

## சிங்கப்பூரின் ஜனாதிபதியாக யாழ்ப்பாணத் தமிழர் தெரிவு



சிங்கப்பூர், செப். 2
யாழ்ப்பாணம் ஊரெழுப் பகுதியை பூர்வீகமாகக் கொண்ட தர்மன் சண்முகரத்தினம் சிங்கப்பூர் ஜனாதிபதித் தேர்தலில் 70 வீதத்துக்கு மேலான வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
»11

## கனடா அனுப்புவதாக ரூ.54 லட்சம் மோசடி!

யாழ்ப்பாணம், செப். 2
கனடா அனுப்புவதாகக் கூறி, கோண்டாவிலைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிடமிருந்து 54 இலட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது.
இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. வெளிமாவட்டத்
»11

### உதயன் ஊடக அனுசரணையில்
## நல்லூர் ஆலயச் சூழலில் சுகாதாரத் திருவிழா!

யாழ்ப்பாணம், செப். 2
நல்லூர் ஆலயச் சுற்றாடலில் 'சுகாதாரத் திருவிழா' நேற்று ஆரம்பமானது. நல்லூர் மேற்கு வீதியில் உள்ள மங்கையர்க்கரசி
»11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர் அத்துமீறல்

# யாழில் நேற்றுப் போராட்டம்




யாழ்ப்பாணம், செப். 2

**இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை கவன வீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்கள், சமாசங்கள், சம்மேளனத்தினர் மற்றும் மீனவ சமூகங்கள் இணைந்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டன.

போராட்டத்தில் "அழிக்காதே அழிக்காதே எமது வளங்களை அழிக்காதே", "கடற்றொழில் அமைச்சரே இந்திய இழுவைப் படகுகளின் வருகையை நிறுத்துங்கள்", "கைதுசெய் கைதுசெய் இந்திய இழுவைப் படகுகளைக் கைது செய்" போன்ற பதாகையை ஏந்திவாறு போராட்டக்காரர்கள் கோஷம் எழுப்பி போராடினர்.

போராட்டத்தின் முடிவில் யாழ்ப்பாண மாவட்டச் செயலரிடம் மனுவொன்றும் கையளிக்கப்பட்டது.

(ச-27-20)

## தகவல் அறியும் உரிமையை அரசாங்கமே மீறுகின்றது!

### வெரிட்டி ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் தகவல்

கொழும்பு, செப். 2

கடந்த ஆண்டு மற்றும் இந்த ஆண்டு செயற்படுத்தப்பட்ட சுமார் 3 ஆயிரம் கோடி ரூபா மதிப்பிலான 83 திட்டங்களில் பொதுவில் வெளியிடப்பட வேண்டிய பெரும்பாலான தகவல்களை அரசாங்கம் பகிரங்கப்படுத்தவில்லை என்று வெரிட்டி ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் தெரிவித்துள்ளது.

தகவல்களைக் கேட்பதற்கு முன் பகிரங்கப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையைப் பின்பற்றாததன் மூலம், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் விதிகளை அரசாங்கம் மீறியுள்ளதாக அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஆண்டு செயற்பாட்டில் இருந்த 60 திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டதில், அந்தத் திட்டங்கள் தொடர்பாக வெளியிடவேண்டிய 82 சதவீத தகவல்கள் வெளியிடப்படவில்லை என்பது தெரியவந்தது.

வெரிட்டி ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் படி, இந்த ஆண்டு உள்ளடக்கப்பட்ட 60 திட்டங்களில் 37 திட்டங்கள் கடந்த ஆண்டு முதல் செயற்பாட்டிலுள்ள பழைய திட்டங்கள் ஆகும்.

இந்தத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்குப் பொறுப்பான அமைச்சகங்கள் மற்றும் முகவரங்களின் இணையத்தளங்களில் திட்டம் தொடர்பான தகவல்கள் கிடைக்கும் மற்றும் கிடைக்காததன் அடிப்படையில் வெரிட்டி ரிசர்ச் இந்த மதிப்புகளை வழங்கியுள்ளது.

தகவல்களை வெளியிடும்போது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று தகவல் அறியும் சட்டம் கட்டளையிடுகிறது. ஆனால், 2022 இல் உள்ளடக்கப்பட்ட 60 திட்டங்களில், வெளியிடப்பட்ட தகவல்களில் 18 சதவீதம் ஆங்கிலத்திலும் 5 சதவீதம் சிங்களத்திலும் இருந்தது. தமிழில் 4 சதவீதம் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இலங்கையில் ஆங்கில மொழி தெரியாத 69 வீத மானோரின் இந்தத் திட்டங்கள் குறித்த தகவல் அறியும் உரிமை முடங்கியுள்ளதாக வெரிட்டி ரிசர்ச் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

(ஒ-இ)

### போதைப்பொருள் கடத்தல் தடுப்பு:

## இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் வருகையை சாதகமாக்குங்கள்

### தமிழ்க்கட்சிகளிடம் அன்னராசா வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப். 2

வடக்குக் கடற்பரப்பினூடாக இடம்பெறும் சட்ட விரோதச் செயற்பாடுகளான போதைப்பொருள் வர்த்தகம் உள்ளிட்டவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் இலங்கை வரவுள்ள இந்தியப் பாதுகாப்பு அமைச்சரிடம் தமிழ்க் கட்சிகள் எடுத்துரைக்கவேண்டும், எல்லைப் பாதுகாப்பை அதிகரிக்கவேண்டும் - இவ்வாறு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத்தின் தலைவர் அ.அன்னராசா வேண்டுகோள் விடுத்தார்.

அவர் மேலும் கூறுகையில்;

இந்தியாவிலிருந்து இலங்கையின் வடக்குக் கடற்பரப்பினூடாகத் தொடர்ச்சியாக அதிகளவான போதைப்பொருள்கள் கடத்தப்பட்டு வருகின்றன. இதனால் வடக்கில் பாடசாலை மாணவர்கள் உட்படப் பலரும் போதைக்கு அடிமையாகி வருவதுடன் சமூக விரோதச் செயற்பாடுகளும் நாள்தோறும் நடந்தேறுகின்றன.

கடல் மார்க்கமாக இடம்பெறுகின்ற போதைப்பொருள் கடத்தலுக்கு முற்றுப்புள்ளி இதுவரை கிடைக்கவில்லை. மாதகல், வடமராட்சி கிழக்கு, மன்னார், தலைமன்னார் உள்ளிட்ட கடற்பரப்புக்களில் அதிகளவிலான போதைப்பொருள் அண்மைக்காலமாகப் பறிமுதல் செய்யப்படுகிறது. கடல்மார்க்கமாகப் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் யார் என்பது கண்டறியப்படவேண்டும்.

போரால் பாதிக்கப்பட்ட சமூகத்தில் பேரழிவை ஏற்படுத்திவரும் போதைப்பொருள் பயன்பாட்டை ஒழிப்பதற்கு இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் வருகையை தமிழ்க் கட்சிகள் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி எல்லைப்பாதுகாப்புக் கண்காணிப்பு குறித்து விளக்கவேண்டும் - என்றார்.

(ச-20-27)

### மன்னாரில்



## அரசகாணியில் காடழிப்பு சந்தேகநபர்கள் தப்பிப்பு

மன்னார், செப். 2

மன்னார் - மாந்தைமேற்கு கோவில்குளம் பகுதியிலுள்ள 15 ஏக்கர் அரச காணியை இரவோடிரவாக துப்புரவு செய்ய முற்பட்ட நபர்கள் இராணுவம் மற்றும் பொலிஸாரைக் கண்டதும் தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடந்துள்ளது.

ஜே.சி.பி. இயந்திரங்களைப் பயன்படுத்தி காடுகளை அழித்து காணி துப்புரவு செய்யப்படுகிறது என வழங்கப்பட்ட தகவலுக்கமைய அந்தப் பகுதிக்கு இலுப்பைக் கடவை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் விரைந்தனர். அங்கு காடுகளை அழித்து துப்புரவில் ஈடுபட்டவர்கள் இராணுவத்தினரைக் கண்டதும் ஜே.சி.பி. இயந்திரங்களைக் கைவிட்டுத் தப்பிச் சென்றனர்.

துப்புரவுக்கு பயன்படுத்தப்பட்ட 3 ஜே.சி.பி. இயந்திரங்களை மீட்ட இலுப்பைக்கடவை பொலிஸார் சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்கு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ச-27)

## கட்சியில் இருந்து நீக்க முயற்சி

### தயாசிறி குற்றச்சாட்டு

சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து என்னை நீக்க சிலர் முயற்சித்து வருகின்றனர் - இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

'என்னைக் கட்சியில் வைத்திருந்த முன்னாள் ஜனாதிபதியும் கட்சியின் நிறைவேற்றுக்குழுவும் விரும்பவில்லை என்றால், நான் விலக விரும்புகிறேன். கீழ் மட்டத்தில் அப்படியான அழுத்தங்கள் இல்லை. மேல் மட்டத்திலேயே இந்த அழுத்தங்கள் உள்ளன. இதற்கு நான் அஞ்சமாட்டேன். யார் என்னை கட்சியில் இருந்து நீக்க முயற்சிக்கின்றனர் என்பதைக் கூறமுடியாது. இவர்களுக்கு சுதந்திரக்கட்சியை ஐக்கிய தேசியக்கட்சியுடன் கூட்டணியை ஏற்படுத்தும் தேவையே உள்ளது' என்று குறிப்பிட்டார்.

(ஒ-44)

## அரச பணியாளர்களுக்கான சம்பளச் செலவு குறைந்தது

### இலங்கை மத்திய வங்கி தகவல்

அரச நிறுவனங்களின் ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காக இந்த வருடத்தின் முதல் 4 மாதங்களில் அரசாங்கத்தின் செலவு சுமார் 4 வீதமாகக் குறைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. முதல் 4 மாதங்களில் அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காக 303.3 பில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் முதல் 4மாதங்களுடன் ஒப்பிடும்போது, 12.8 பில்லியன் குறைந்துள்ளது.

கடந்த ஆண்டு ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை, கட்டாய ஓய்வில் சென்றமை, ஓய்வுபெறும் வயதை 60 வயதாகத் திருத்தியமை, அரச துறைக்கான ஆள்சேர்ப்பை நிறுத்தியமை போன்ற காரணமாக அரசாங்கம் செலவிட்ட நிதி இவ்வாறு குறைந்துள்ளது.

(ஒ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




சண்டைக்காலத்தில ஆ[illegible]டையும் கடும் கொழுவல் எண்டால், 'அவைக்கு இயக்கத்தோட தொடர்பிருக்கு' எண்டு ஒரு பெட்டிசத்தை ஆமிக்கு அனுப்பினால்சரி. அந்தப் பெட்டிசம் உண்மையா, பொய்யா எண்டு கூடப்பாக்காமல் உடன வந்து, பெட்டிசத்தில சொல்லுப்பட்ட ஆக்களை தூக்கிக் கொண்டு போடுவாங்கள். இப்ப அதுமாறி 'அந்த மரம் 2000 வருசத்துக்கு முந்தினது. இந்தக் கட்டடம் 500 வருசத்துக்கு முந்திக் கட்டினது'எண்டு மொட்டைக் கடிதம் போட்டவுடனேயே ஏன், எதுக்கு எண்ட கேட்டுக் கேள்வி இல்லாமல் அதை மரபுரிமைச் சின்னம் எண்டு தொல்லியல் திணைக்களம் வர்த்தமானியில அறிவிச்சிடும். அதை மாதிரி எங்கையெல்லாம் பழைய செங்கல்லு தெரியுதோ அங்கையெல்லாம் விகாரை இருந்ததெண்டு அடுத்த செக்கனே தொல்லியல் திணைக்களம் பறந்து வந்து நிக்கும்.

இப்பிடி ஆராவது சும்மா கிடங்கு கிண்டினாலே அங்க விகாரை இருந்தது எண்டு மூக்கில வேர்த்தமாதிரி ஓடிவாற தொல்லியல் திணைக்களத்துக்கு முந்தநாள் முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கு மட்டும் வாறதுக்கு பாதை தெரியாமல் போட்டுதுபோல. கொக்குத்தொடுவாயில கண்டுபிடிச்ச மனிதப்புதைகுழியைத் தோண்டுறதுக்கு நீதிமன்றத்தில கலந்துரையாடல் ஒண்டு நடந்தது. இப்பிடியான அகழ்வு வேலையில, எப்பிடி அந்தப் புதைகுழிக்குள்ள இருக்கிற எலும்புகள், உடுப்புகள், தடயப் பொருள் எண்டதுகளை பத்திரமா மீட்கவேணும் எண்டது தொல்லியல் திணைக்களக்காரருக்குத்தான் நல்லாத் தெரியும். எந்தக் காலத்தில புதைக்கப்பட்டது எண்டதையும் அவை அப்பிடி தோண்டேக்குள்ளயே கைக்கணக்கில கண்டு பிடிச்சிடுவினம். அதால இந்த மீட்டிங்குக்கு அவை கட்டாயம் வந்திருக்கோணும். ஆனால் இந்தப் புதைகுழியைத் தோண்டினால் அவைக்கு ஒருலாபமுமில்லையே. அங்க ஏதும் விகாரை இருந்ததெண்டு பேய்க்காட்ட ஏலாதுதானே. அதாலையோ என்னவோ அந்த மீட்டிங் பக்கம் அவை எட்டியும் பாக்கேலே.

சிலவேளை அவைக்கு வேற ஏதும் முக்கியமான வேலை இருந்திருக்கும், அதால அங்க போயிருப்பினம் எண்டும் சாட்டுச் சொல்ல ஏலாது. ஏனெண்டால் முந்தநாள்தான் குருந்தூர்மலை கேஸ் அதே வளாகத்தில உள்ள நீதிமன்றத்தில நடந்தது. அதுக்கு தொல்லியல் திணைக்களக்காரர் வந்திருந்தவை. அந்தக் கேஸுக்கு வந்தவைக்கு கொஞ்சம் இந்த மீட்டிங் பக்கமும் எட்டிப் பாக்க நேரமில்லை எண்டு சொல்லேலாதே. தொல்லியல் திணைக்களக்காரரின்ர குடுமி, விகாரை இல்லாமல் ஆடாது போல.



- பட்சி

padsi@uthayan.com

# தெய்வீகக் கூட்டத் தொடர்

யாழ்ப்பாணம், செப். 2

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் தெய்வீக திருக்கூட்டத் தொடர் 13ஆம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4.15 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் சைவ சித்தாந்தத்துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி தி. செல்வ மனோகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். பல்கலைக் கழக முன்னாள் இந்துக் கற்கைகள் பீட பீடாதிபதி கலாநிதி திருமதி சுகந்தினி ஸ்ரீ முரளீதரன் கலந்துகொள்ளவுள்ளார்.

"கந்தபுராணத்தில் கவித்துவம்" மற்றும் "தேவாரங்களில் அறக்கருத்துகள்" எனும் தலைப்புக்களில் சிறப்புரைகள் இடம்பெறவுள்ளதோடு அறநெறிப் பாடசாலை மாணவர்களின் இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்வுக்கு அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஒ-ரி2)



## நல்லூரான் சிறப்பம்சம்

### "கந்த நாமம் ஓங்குக"

நல்லூர் முருகனின் திருவிழா நமக்கு
நல்லதொரு செய்தியைத் தர வேண்டும்
நாட்டில் ஆணவமும் அராஜகமும்
நீட்டி நிமிர்ந்து ஆட்சி செய்கிறது.
கல்லையும் கனியாக்கும் கந்தா முருகா - ஏன்
காலை விடிந்தாலோ கவலை தரும் செய்திகள்!
கண்ணீரில் நாடு கலக்கமடைகிறது - சதா
காசு பணம் பேசு பொருளாகியுள்ளது!
வல்லவொரு ஆட்சி இனி வரமாட்டாதோ? முருகா
வறுமையின் கொடூரத்தை எவரும் அறிந்திலர்!
வெந்து தணிந்த பூமியில் வன்மையே ஆள்கிறது!
வீட்டு வாசல்கள் தோறும் நிம்மதி தர வேண்டும்!

கே.எஸ்.சிவஞானராஜா

### நல் வாழ்வு மிதந்து வந்திடுமே!

ஆறுமுகனைப் பார்த்திடவே
தீராத நோயும் தீர்ந்து போகும்!
முத்துக் குமரனைப் பார்த்திடவே
முத்தான வாழ்வு மலர்ந்து வரும்!
வேலவனைப் பார்த்திடவே
வெஞ்சினமது தகர்ந்து போகும்!
பழனிப் பதி வாழ்பவனை பார்த்திடவே
பஞ்சமெல்லாம் தீர்ந்து போகும்!
நல்லூர் நாயகனைப் பார்த்திடவே
நல் வாழ்வு மிதந்து வந்திடுமே!

மிஷாந்தி செல்வராஜா ஜெயசிங்கம்

# கொடுப்பனவுகள்

தென்மராட்சி பிரதேச முதியோர்களுக்கான ஜூலை மாதக் கொடுப்பனவுகள் நேற்றுத் தொடக்கம் அஞ்சல் அலுவலகங்களில் விநியோகிக்கப்படுகின்றது.

இதேவேளை - பிரதேசத்திலுள்ள மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுநீரகப் பாதிப்பு நோயாளர்கள் ஆகியோருக்கான கொடுப்பனவுகள் அவர்களது வங்கி கணக்குகளிலும் வைப்பிலிடப்பட்டுள்ளது என பிரதேச செயலகத்தினர் தெரிவித்துள்ளனர். (ஒ-ரி2-9)

# டீசல் விலை அதிகரிப்பு:
# பேருந்து கட்டணம் உயர்வு

கொழும்பு, செப். 2

டீசல் விலை 35 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், பேருந்து கட்டணம் 4 சதவீதத்தால் இன்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பேருந்துக் கட்டண பொறிமுறையை மாற்றியமைக்கும்போது எரிபொருள் விலை அதிகரிப்பின் தாக்கம் 4 வீதத்துக்கு அதிகமாக இருந்தமையால் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், முச்சக்கரவண்டி கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது என அகில இலங்கை முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கட்டணம் அதிகரிக்கப்படும் நிலையில், பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ள மக்கள் மேலும் அழுத்தத்துக்குள்ளாக்க முடியாதென முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுசில் ஜயருக் தெரிவித்துள்ளார். (ஒ-இ)

# 3 ஆயிரம் தாதியர்களை இணைக்க நடவடிக்கை

## சுகாதார அமைச்சர் தகவல்

கொழும்பு, செப். 2

இலங்கையில் மேலும் 3 ஆயிரம் தாதியர்களை தாதியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்தவிடயம் தொடர்பில் ஏதேனும் பிரச்சினை நிலவும் பட்சத்தில் இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தைத் தயாரிக்குமாறு அமைச்சின் செயலருக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

சுகாதார அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இந்த அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார்.

2018 ஆம் ஆண்டு தாதியர் பயிற்சிக்காக ஆள்சேர்ப்பு செய்யப்பட்ட சுமார் 2 ஆயிரத்து 500 தாதியர் பயிற்சியாளர்களையும், 500 தாதியர் பட்டதாரிகளையும் சேவையில் இணைத்துக்கொள்ள நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், 2019 - 2020ஆம் ஆண்டுகளில் உயர்தரம் பயின்றவர்களை தாதியர் பயிற்சிக்காக இணைத்துக்கொள்ளும் வர்த்தமானி அறிவிப்பை செப்ரெம்பர் நடுப்பகுதிக்குள் வெளியிடவும் சுகாதார அமைச்சகம் திட்டமிட்டுள்ளது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினை அம்மன் பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப். 2
வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9. 01 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ஒ-ரி2-66)



## மாரியம்மன் தீ மிதிப்பு!

மன்னார், செப். 2
மன்னார் - நானாட்டான் ஸ்ரீ செல்வமுத்து மாரியம்மன் ஆலய தீ மிதிப்பு கடந்த 30 ஆம் திகதி புதன்கிழமை மிகச் சிறப்பாக இடம்பெற்றது. பக்தர்கள் விரதம் இருந்து தீ மிதித்து நேர்த்திக் கடன்களை நிறைவேற்றியிருந்தனர். (ஒ-ரி2-27)

## வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் திருட்டு

யாழ்ப்பாணம், செப். 2
நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் கடந்த 30 ஆம் திகதி புதன்கிழமை உண்டியல் உடைக்கப்பட்டு, வசந்த மண்டபத்தில் இ[illegible] ஒரு தொகைப் பணம் களவாடப்பட்[illegible]து.
[illegible]டுச் சம்பவத்துடன் ஆலயத்தில் நெருங்கிச் செயற்பட்டவர் சம்பந்தப்பட்டுள்ளமை தொடர்பில் சி.சி.ரி.வி. காட்சிகள் மூலம் உறுதியாகியுள்ளது. மேலும் இது தொடர்பாக ஆலயக் குருக்களினால் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ-ரி2- 27)



## நல்லைக்கந்தனுக்கு வேல் தாங்கிய பாதயாத்திரை

யாழ்ப்பாணம், செப். 2
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு, வவுனியா - வேப்பங்குளம் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி ஆலயத்திலிருந்து நல்லைக்கந்தன் திருத்தலத்துக்கான 10ஆவது வருட வேல் தாங்கிய நடைபாத யாத்திரை எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.
வவுனியா - மன்னார் வீதி வழியாக வவுனியா நகரை அடைந்து 8ஆம், 9ஆம்,10ஆம், 11ஆம், 12ஆம், 13ஆம் திகதிகளில் ஏ-9 வீதிவழியாக 128 ஆலயங்களைத் தரிசித்து நல்லைக்கந்தன் தேர்த் திருவிழாவன்று நல்லூரை வந்தடையவுள்ளது. இந்த பாதயாத்திரைக்கு சகல இந்து அறங்காவலர் சபையினரும், ஆலய குருமார்கள், அடியார்கள் ஒத்துழைப்பு நல்குமாறு ஆலய நிர்வாகி அறநெறிச் செல்வி கு.ஜெயராணி கேட்டுக் கொண்டுள்ளார். (ச-66)



## தனிநாயகம் அடிகளார் நினைவேந்தல் மன்னாரில்

மன்னார், செப். 2
தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாரின் 43 ஆவது நினைவுதினம் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை மன்னாரில் கடைப்பிடிக்கப்பட்டது.
மன்னார் - பஜார் பகுதியிலுள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், கலையருவி இயக்குநர் அருட்தந்தை செல்வநாயகம் அடிகளார், மன்னார் தமிழ்ச் சங்கத்தின் பிரதிநிதிகள், மக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-56)


## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், செப்.2
சுயாதீன ஊடகவியலாளர் அமரர். ஞானப்பிரகாசம் பிரகாஸின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, மாபெரும் குருதித்தானம் நிகழ்வு இன்று சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அவரது நண்பர்களின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. (ய)

## யாழ். மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 2
யாழ். மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் புதிய கட்டடம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரால் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வுக்கு தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மற்றும் மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட அலுவலர்கள் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி2)

## இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். முயற்சிகளை தவிர்க்கவும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். முயற்சிகள் சாதகமாக முடியும். செலவுகளைச் சமாளித்துவிடுவீர்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். உற்சாகமாகக் காணப்படுவீர்கள்.

**கடகம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை.

**துலாம்:** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு வருத்தம் தரும். அலைச்சல் ஏற்படும். சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** மகிழ்ச்சி தரும் நாள். மனவருத்தம் நீங்கி அந்நியோன்னியம் அதிகரிக்கும். மகிழ்ச்சி உண்டாகும். தந்தைவழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும். பிரச்சினைகள் நீங்கும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு தந்தையுடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பிரச்சினைகள் ஏற்படும்.

**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். அனுசரித்துச் செல்வது நல்லது. மற்றவர்களுடன் வீண் சர்ச்சைகளில் ஈடுபடவேண்டாம். வீட்டில் பொறுப்புகள் அதிகரிக்கும். வழிபாடு நலம் சேர்க்கும்.

## கிரிக்கெட் இறுதி ஆட்டம் புலோலியில் நாளை

யாழ்ப்பாணம், செப். 2
வடமராட்சியின் புகழ்பூத்த உபயகதிர்காமம் விளையாட்டுக்கழகத்தின் மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புலோலி உபயகதிர்காமம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
வடமராட்சியின் சிறந்த வீரர்களைத் தெரிவுசெய்து 9 அணிகளைக் கொண்ட சுற்றுத் தொடர் கடந்த 4 வாரங்களாக இடம்பெற்று வந்தது. இந்தநிலையில் இதன் இறுதி ஆட்டமே நாளையதினம் நடைபெறவுள்ளது. போட்டியின் பிரதம அதிதியாக உதயன் குழுமத் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ. சரவணபவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஒ-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## யாருக்குத் தேவை நல்லிணக்கப்பாடம்?

இலங்கையில் சமாதான காலத்திலிருந்தே அதிகம் உச்சரிக்கப்பட்டு வரும் சொல் 'நல்லிணக்கம்'. அரசசார்பற்ற நிறுவனங்கள் தங்களின் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக 'நல்லிணக்கம்' தொடர்பில் பல முன்மொழிவுகளைச் சமர்ப்பித்து வெளிநாடுகளிடமிருந்து சுளையாகப் பணம் பெற்றிருந்தன என்பது வேறு கதை. ஆனால், 'நல்லிணக்கம்' என்பது நாட்டில் மருந்துக்கும் இல்லை என்பதால்தான், இன்றுவரை அது பேசுபொருளாக இருக்கின்றது. இப்படியொரு நிலைமையில், நாட்டில் மதங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அனைத்து மதங்களையும் அடிப்படையாகக் கொண்ட சமயக் கல்வியை, புதிய கல்வி மறுசீரமைப்பில் உள்ளடக்குவதற்கு முன்மொழிவுகள் கிடைத்துள்ளதாக மத விவகாரங்கள், சகவாழ்வு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுத் தலைவர் உப்புல் மஹேந்திர ராஜபக்ச தெரிவித்தார். அத்துடன் மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலேயே கடந்த முறை தேசிய வெசாக் கொண்டாட்டத்தை அனைத்து இன மக்களும் வாழக்கூடிய புத்தளம் பிரதேசத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிடுகின்றார். இப்போது பாடசாலை மாணவர்களுக்கு 'நல்லிணக்கத்தைப்' பற்றி வகுப்பெடுப்பது என்கின்ற அளவுக்கு அரசாங்கம் வந்திருக்கின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஏன் இதுவரை காலமும் 'நல்லிணக்கம்' சாத்தியப்படவில்லை? என்பது தொடர்பில் அரசாங்கம் ஆராய்வதற்குத் தயாரில்லை. வெறும் உதட்டளவில் மாத்திரமே நல்லிணக்கம் பேசப்படுகின்றதே ஒழிய அது ஆத்மார்த்தமாக – உளரீதியாகப் பேசப்படவில்லை. இப்போது பணம் கறக்கும் ஒன்றாகவே நல்லிணக்கத்தை நோக்கும் நிலைமை காணப்படுகின்றது. நாட்டில் இனங்களுக்கு இடையில் ஏற்பட்ட காயத்துக்கு மருந்துபோட நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குவதாக அரசாங்கம் சொல்கின்றது. ஆனால், போரால் பாதிக்கப்பட்ட தரப்போ அதில் நம்பிக்கையில்லை என்று எதிர்ப்பு வெளியிடுகின்றது. ஆனாலும் அரசாங்கம் ஆதிக்க மனோபாவத்திலிருந்து, யார் எதிர்ப்பு வெளியிட்டாலும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்கியே தீருவோம் என்பதில் உறுதியாக இருந்து ஆணைக்குழுவுக்கான வரைவையும் தயாரித்து வருகின்றது. இது அடிப்படையிலேயே முரணாக இருக்கின்றது. பாதிக்கப்பட்ட தரப்பு எதிர்க்கும் ஒன்றை நடைமுறைப்படுத்துவது எப்படி நல்லிணக்கம் என்ற வரையறைக்குள் வரும்?

இந்த நாட்டில் நல்லிணக்கம் தொலைந்துபோனமைக்கான காரணம் வெளிப்படையானது. போலியாக எழுதப்பட்ட வரலாற்றை நம்பி – மகாவம்சச் சிந்தனையில் ஊறித்திளைத்து, இந்த நாடு சிங்கள – பௌத்தர்களுக்கே உரியது என்பதை நடைமுறையாக்க முயல்வதே நல்லிணக்கம் காணாமல் போனமைக்குக் காரணம். அந்தச் சிந்தனையில் அடிப்படையில் மாற்றம் ஏற்படாமல் நல்லிணக்கத்துக்காக முன்னெடுக்கப்படும் அனைத்து முயற்சிகளும் விழலுக்கு இறைத்த நீர்தான்.

இலங்கையில் ஆட்சியைப் பிடிப்பதற்காக ஒவ்வொரு தரப்பும் கையில் எடுக்கும் இலகுவான அதிக விளைவுகளைத் தரக்கூடிய ஆயுதம்தான் இனவாதம். ஆனால், அது ஆபத்தானது. இனவாதம் – மதவாதம் என்பன வாக்கு வங்கிகளை உருவாக்க இலகுவானதாக இருக்கலாம். ஒருமுறை அதைத்தூண்டி விட்டால் அதை அணைப்பது முடியாத காரியம். யார் இனவாதத்தீயை மூட்டினார்களோ, அதே இனவாதத்தீயில் அவர்களும் கருகிப்போனார்கள் என்பதே இலங்கையின் வரலாறாக இருக்கின்றது.

இப்படியானதொரு இனவாத சகதியைவிட்டு எந்தவொரு சிங்கள ஆட்சியாளரும் வெளியில் வந்து அரசியல் செய்வதற்குத் தயாரில்லை. கடந்த பொருளாதார நெருக்கடி காரணமாக அடங்கிப்போன இனவாதப் பேயை அவ்வாறே சமாதியாக்குவதற்குப் பதிலாக அடுத்த தேர்தலை இலக்குவைத்து தற்போது மீண்டும் ஊதிப்பெருப்பித்திருக்கின்றனர். இவ்வாறெல்லாம் செய்துவிட்டு நல்லிணக்கம் வரும் என்று எதிர்பார்த்தால்..?, அது எப்படிச் சாத்தியம். முடியுமானால் சிங்கள அரசியல்வாதிகளுக்கும், பிக்குகளுக்கும் நல்லிணக்கம்பற்றி வகுப்பெடுங்கள். அவர்களில் மாற்றம் வந்தாலே நாட்டில் நல்லிணக்கம் தானாக வந்துவிடும்.

**நாளொரு நல்வார்த்தை**

**வெறுப்பது யாராக இருந்தாலும். நேசிப்பது நீங்களாக இருங்கள். - அன்னை தெரேசா -**




# நல்லிணக்கத்துக்கும் கல்வித் திட்டமாம்!

கொழும்பு, செப். 2

**நாட்டில் மதங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அனைத்து மதங்களையும் அடிப்படையாகக் கொண்ட சமயக் கல்வியை, புதிய கல்வி மறுசீரமைப்பில் உள்ளடக்குவதற்கு முன்மொழிவுகள் கிடைத்துள்ளதாக மத விவகாரங்கள், சகவாழ்வு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுத்தலைவர் உபுல் மஹேந்திர ராஜபக்ச தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

30 வருட காலப் போர் நிறைவடைந்த பின்னர் இந்நாட்டில் இனங்களுக்கு இடையில் சகவாழ்வைக் கட்டியெழுப்ப பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்ததுடன் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடன் அவை வீழ்ச்சி அடைந்தன.

ஜனாதிபதியுடன் இணைந்து இந்நாட்டில் வாழ்கின்ற அனைத்து இனமக்களுக்கும் இடையிலும் சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த பல்வேறு பணிகளை முன்னெடுக்கின்றோம். மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலேயே கடந்த முறை தேசிய வெசாக் கொண்டாட்டத்தை அனைத்து இன மக்களும் வாழக்கூடிய புத்தளம் பிரதேசத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. மதங்களுக்கு இடையில் சகவாழ்வை ஏற்படுத்தவேண்டுமாயின் பெரியோர்களுக்கு மத்தியில் புரிதலை ஏற்படுத்துவது அவசியமாக இருந்தாலும், இளைஞர்கள், பாடசாலை மாணவர்கள், சிறுவர்களுக்கு அனைத்து இன மக்களுடனும் ஒற்றுமையாக வாழ்வது குறித்து தெளிவூட்டுவதே நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வை ஏற்படுத்த மிகப்பொருத்தமாக இருக்கும் - என்றார். (ஒ-26)

## கைது

கிளிநொச்சி, செப். 2

கையூட்டல் பெற்ற குற்றச்சாட்டின்கீழ் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மல்லாவி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். ஜே.சி.பி. ரக வாகனமொன்று வருமானவரிப் பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் என்பன இல்லாதமை அறிந்தபோதிலும் அதற்கு எதிராக குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் சட்டநடவடிக்கை எடுக்காது அவர்களிடம் இருந்து இலஞ்சம் பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்களை சட்டநடவடிக்கைக்குட்படுத்த மேலதிக விசாரணைகளை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (ச-113)

## எதிர்க்கட்சிகளால் மத மோதல் ஆபத்து

### பிரசன்ன ரணதுங்க குற்றச்சாட்டு

இந்து மற்றும் பௌத்த மக்களுக்கு இடையே மத மோதலை உருவாக்கும் நோக்கில் எதிர்க்கட்சிகளின் அரசியல் நிகழ்ச்சிநிரல் செயற்படுத்தப்படுகின்றது என்று ஆளும்கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மோதலை உருவாக்குவதன்மூலம் இந்தியாவின் ஆதரவை தடுத்து நிறுத்த முடியுமென எதிர்க்கட்சிகள் நினைத்து வருகின்றன. இந்த விடயத்தை மிகவும் புத்திசாலித்தனமாக எதிர்கொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-இ)

**நாளை**

03.09.2023
ஞாயிற்றுக்கிழமை
ஆவணி 17

சுபநேரம் : 09.05 - 10.35
ராகுகாலம் : 04.35 - 06.05

சங்கடஹர கணபதி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெற்பேலி வீதி சீரமைப்பு மக்களிடம் நிதி சேகரிப்பு

**யாழ்ப்பாணம், செப். 2**
**கொடிகாமம் - கச்சாய் வீதியிலிருந்து கெற்பேலி ஊரெல்லைத்தெரு வரையான மணல் வீதியின் தற்காலிக சீரமைப்புக்கென நிதிதிரட்டும் பணியில் அந்தப் பகுதி மக்கள் ஈடுபட்டுள்ளனர்.**

வீதியை தார் வீதியாக புனரமைப்பு செய்யவென கடந்த வருடம் 17 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. ஆயினும் உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டதையடுத்து அந்த நிதி பயன்படுத்தப்படாததனால் திரும்பியுள்ளது.

கனரக வாகனங்களின் பாவனையால் இந்த வீதியில் தற்போது குண்டும் குழிகளும் ஏற்பட்டு பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மழைகாலம் ஆரம்பித்தால் வீதியை முற்றாகப் பயன்படுத்த முடியாத நிலைமையே உருவாகும்.

இந்தநிலையில் மழைகாலம் ஆரம்பிக்க முன் வீதியிலுள்ள குண்டும்குழிகளைத் தற்காலிகமாக நிரவி சீரமைப்புச் செய்ய மக்களிடம் நிதி திரட்டும் பணியில் நலன்விரும்பிகள் ஈடுபட்டுள்ளனர். (ச-9)



## இராணுவ முகாமை அகற்றவேண்டாம்

### கிளிநொச்சியில் கவனவீர்ப்பு

கிளிநொச்சி, செப். 2
கிளிநொச்சி நகரப் பகுதியில் அமைந்துள்ள 55 ஆவது பிரிவு இராணுவ முகாமை அகற்றவேண்டாம் எனக் கூறி அக்கராயன், ஆனைவிழுந்தான் பகுதி மக்கள் நேற்று வெள்ளிக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.
போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்;
இந்த முகாமிலுள்ள இராணுவத்தினரால் பல்வேறு சமூக நலச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வறட்சியான கால நிலையிலும் இராணுவத்தினரால் குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறுகிறது.
அத்துடன் இந்தப் பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதில் அக்கராயன் பொலிஸார் அசமந்தபோக்கு கடைப்பிடிக்கும் நிலையில் இராணுவத்தினரே முன்நின்று குற்றச்செயல்களைத் தடுக்கின்றனர். ஆகவே இந்த இராணுவ முகாமை அகற்றவேண்டாம்- என்றனர். (ச-113,27)

## 2,220 நாய்களுக்கு யாழில் ஏ.ஆர்.வி. தடுப்பூசி!

யாழ்ப்பாணம், செப். 2
யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் கடந்த மாதத்தில் மட்டும் 2 ஆயிரத்து 220 வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்க்கான ஏ.ஆர்.வி. தடுப்பூசி ஏற்றப்பட்டதாக மாநகர சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.
கொழும்புத்துறையில் 624 வளர்ப்பு நாய்களுக்கும் அரியாலையில் 622 நாய்களுக்கும் நல்லூரில் 359 நாய்களுக்கும் வண்ணார்பண்ணையில் 615 நாய்களுக்கும் தடுப்பூசி போடப்பட்டது.
அதேவேளை குருநகர், நாவாந்துறை, யாழ்.நகர் போன்ற பகுதிகளிலுள்ள நாய்களுக்கு நல்லூர்த் திருவிழாவை முடிவடைந்த பின்னர் விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றப்படும் என்றும் மாநகர சுகாதாரப் பிரிவு தெரிவித்தது. (ச-17)

### யாழ். மாவட்டச் செயலரால்

## விளையாட்டை ஊக்குவிக்க அபிவிருத்திக் குழு நியமிப்பு

யாழ்ப்பாணம், செப்.2
விளையாட்டுத்துறையை ஊக்குவித்து மேம்படுத்தும் வகையில் யாழ்.மாவட்டத்துக்கென விளையாட்டு அபிவிருத்திக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.
யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் இந்தக் குழுவை நேற்றுமுன்தினம் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.
இதுகுறித்து யாழ்.மாவட்டச் செயலர் கூறுகையில்;
விளையாட்டுத்துறை அமைச்சின்கீழ் மாகாண மாவட்ட பிரதேச விளையாட்டு அபிவிருத்திக் குழு நியமித்தல் தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.
அதனடிப்படையில் பதவி வழியாக மாவட்டச் செயலரை தலைவராகவும் மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஆகிய இருவரை இணைச்செயலாளர்களாகவும், விளையாட்டுடன் தொடர்புடைய மருத்துவ அதிகாரி, சட்டத் தரணி, தொழில்நுட்பத் துறைசார்ந்தோர், சர்வதேச தேசிய மட்டத்தில் சாதனை படைத்த வீர, வீராங்கனைகளிலிருந்து ஒருவர், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர், யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர், தேசிய விளையாட்டு பயிற்றுவிப்பாளர், மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் உள்ளடங்கலாக 15 பேர் கொண்டு இந்தக் குழு உருவாக்கப்பட்டுள்ளது.
எதிர்காலத்தில் யாழ். மாவட்டத்தில் விளையாட்டுப்போட்டிகளை நடத்துதல், தேசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல், யாழ் மாவட்ட பாடசாலை விளையாட்டுத் துறையை ஊக்குவித்தல் போன்ற செயற்பாடுகளில் இந்தக் குழு ஈடுபடும் -என்றார். (ச-125)

## ஆசிரியர் அறைந்ததில் மாணவனின் செவி பாதிப்பு

### ஆசிரியரிடம் விசாரணை

வவுனியா,செப். 2
வவுனியா நகரப்பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் கல்விபயிலும் மாணவன் மீது ஆசிரியர் ஒருவர் காதில் அறைந்து தாக்கிய சம்பவம் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.
பாடசாலையில் தரம்-10 இல் கல்வி பயிலும் மாணவனை ஆசிரியர் ஒருவர் அண்மையில் காதில் அறைந்ததில் செவியில் பாதிப்புக்குள்ளான மாணவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் அதிபருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து இதுதொடர்பில் அவர் வலயக் கல்வி அலுவலகத்துக்குத் தெரியப்படுத்தினார்.
அதனையடுத்து குறித்த ஆசிரியர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார் என்று வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளரான சு.அன்னமலர் தெரிவித்தார். (ச-110,27)

## புலம்பெயர் தொழிலாளர் சங்க அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், செப். 2
சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாகியப்பிட்டி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களை உள்ளடக்கிப் புலம்பெயர் தொழிலாளர் சங்கம் கடந்த 28ஆம் திகதி திங்கட்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி2-66)





## சதுரங்கம்: பூநகரி சம்பியன்

கிளிநொச்சி, செப். 2
நடப்பாண்டுக்கான கிளிநொச்சி மாவட்டச் செயலர் வெற்றிக்கிண்ண சதுரங்கப் போட்டியில் பூநகரிப் பிரதேச செயலக ஆண், பெண் இரு அணிகளும் முதலிடத்தைப் பெற்றுச் சம்பியனாகின.
இந்தப் போட்டி கிளிநொச்சி மாவட்டச் செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி இடம்பெற்று வந்தது. இதில் மாவட்டச் செயலக, பிரதேச செயலக அணிகள் மற்றும் வேறு திணைக்கள அணிகள் உள்ளடங்கலாக 19 அணிகள் பங்குபற்றின.
நேற்றையதினம் நடைபெற்று முடிந்த சதுரங்கப் போட்டியில் ஆண்கள் பிரிவில் பூநகரிப் பிரதேச செயலக அணி முதலாமிடத்தையும் கண்டாவளை பிரதேச செயலக அணி இரண்டாம் நிலையையும் நீர்ப்பாசனத் திணைக்கள அணி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன. பெண்கள் பிரிவில் முதல்நிலையை பூநகரி பிரதேச செயலக அணியும் 2ஆம் நிலையை மாவட்டச் செயலக அணியும், 3.ஆம் நிலையை கரைச்சிப் பிரதேச செயலக அணியும் பெற்றுக்கொண்டன. (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபாநாயகரின் அறிவிப்பு தவறான எடுத்துக்காட்டு

ஜயம்பதி விக்கிரமரத்ன தெரிவிப்பு

கொழும்பு, செப்.2

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட யோசனையை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியாது என சபாநாயகர் விடுத்த அறிவிப்பு முற்றிலும் தவறானது. எதிர்காலத்துக்கான தவறானதொரு எடுத்துக்காட்டு - இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-


நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டவாக்கத்துறையின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை வெகுவாக சிதைவடைந்துள்ள நிலையில் நீதித்துறையில் மீது மாத்திரமே மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.

நீதிமன்றத்தை சவாலுக்குட்படுத்தும் செயற்பாடுகள் நாடாளுமன்றத்தின் ஊடாக தற்போது முன்னெடுக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பான தீர்மானம் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு யோசனையே தவிர சட்டவரைவு அல்ல. நிறைவேற்றப்பட்ட ஒரு யோசனைக்கு சட்ட வரைவுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு ஏதும் கிடையாது.

நீதித்துறையின் சுயாதீனத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் சபாநாயகரின் அறிவிப்பு காணப்படுகிறது. இந்த அறிவிப்பு எதிர்காலத்துக்கும் ஒரு பாரதூரமான தவறானதொரு எடுத்துக்காட்டாக அமையும் - என்றார். (எ-இ)

## உலக சந்தையில் சீனி விலை விரைவில் உயர்வதற்கு வாய்ப்பு!!



**கொழும்பு, செப். 2**

**இந்தியா, அரிசி ஏற்றுமதிக்குத் தடை விதித்ததைத் தொடர்ந்து சீனி ஏற்றுமதிக்கு அடுத்த மாதம் முதல் தடை விதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டு மற்றும் சர்வதேச பொருளாதார நிலைமைகளைக் கவனத்தில்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

இந்தியாவில் சீனி உற்பத்தி செய்யும் மாநிலங்களில் நிலவும் வறட்சி காரணமாக கரும்பு விளைச்சல் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இந்தியாவின் சீனி உற்பத்தித் துறையில், 50 வீதத்துக்கு அதிகளவில் கரும்பு வளர்ப்பில் ஈடுபடும் மகாராஷ்ட்டிரா மற்றும் கர்நாடகாவில் பருவமழைகுறைவடைந்துள்ளதன் காரணமாகப் பயிர்ச்செய்கை பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீரற்ற காலநிலை 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு பருவ காலத்தில் சீனி உற்பத்தியைக் குறைக்கும் எனவும் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டு பருவத்துக்கான நடவுகளைக் குறைக்கும் எனவும் தொழிற்றுறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு பருவ காலத்தில் இந்தியாவின் சீனி உற்பத்தி 3.3 வீதம் குறைவடைந்து 31.7 மில்லியன் தொன்களாக இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில், இந்தியா சீனி ஏற்றுமதியை தடை செய்யும் நிலையில், உலக சந்தையில் நியூயோர்க் மற்றும் லண்டன் ஆகியன சீனி விலையை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலைமையானது உலக சந்தையில் கூடுதல் பணவீக்கத்தை ஏற்படுத்துமென்ற கவலையை ஏற்படுத்தியுள்ளது. (ஒ-இ)

## மொட்டுக் கட்சி வெற்று வேட்டாம்!

*அந்தக் கட்சியால் எம்.பி.யான மைத்திரி இப்படிக் கூறுகிறார்*



கொழும்பு, செப். 2

ஆட்சியையும், பதவிகளையும் கைவிட்டு ஓடி ஒளிந்த சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கு, அடுத்த தேர்தலில் மக்கள் ஆணை கிடைக்காது என்று அடித்துக் கூறியுள்ளார் சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன.

அத்துடன், அடுத்த தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றுவதே தமது கட்சியின் எதிர்பார்ப்பு எனவும், இதற்காக முற்போக்கு சிந்தனையுடைய கட்சிகள் ஒன்றிணையவேண்டும் எனவும் மைத்திரிபால சிறிசேன அறைகூவல் விடுத்தார்.

சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

'பொதுஜன பெரமுனக் கட்சி எங்களுக்கு எந்தவிதத்திலும் சவாலாக அமையாது. பதவிகளைவிட்டு ஓடி ஒளிந்தவர்களே அங்குள்ளனர். பிரதமர் பதவிவிலகினார். அமைச்சரவை கலைந்தது. பலர் வெளிநாடு ஓடினர். இப்படியானவர்களுக்கு மக்கள் ஆணை இல்லை. ஆனாலும், தமக்கு மக்களை ஆணை இருப்பதுபோல் காண்பிப்பதற்கு முற்படுகின்றனர். மக்களைத் திரட்டிவந்து கூட்டங்களை நடத்துகின்றனர். அனைத்து முற்போக்குச் சிந்தனை உடைய கட்சிகளுக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம். புதியதொரு ஆட்சியை ஏற்படுத்த அணிதிரளுமாறு எமது கொள்கையுடன் ஒத்துப்போகக்கூடிய, சமாந்தர கொள்கையுடைய இடதுசாரி சக்திகளுக்கு அழைப்பு விடுக்கின்றோம். அதனை அடிப்படையாகக்கொண்டே எமது கட்சி மாநாடு அமையும்' - என்றார். (ஒ-44)

## ஐ.தே.க.வின் நிலையே பெரமுனக் கட்சிக்கும்

*சம்பிக்க ஆரூடம்*

கொழும்பு, செப்.2

2020 பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட நிலையே அடுத்த தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு ஏற்படும் என்று 43ஆம் படையணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் சம்பிரதாய கட்சிகளுக்கு மக்கள் எழுச்சியுடன் முடிவு கட்டப்பட்டுள்ளது. அந்தக்கட்சிகளின் உறுப்பினர்கள் என்னதான் நினைத்தாலும் மக்கள் ஆணை இனி கிடைக்கப்போவதில்லை. ஜுலை 9ஆம் திகதி கோத்தாபய ராஜபக்ச மட்டுமல்ல சம்பிரதாய கட்சி களும் அரசியல் ரீதியில் தோற்கடிக்கப்பட்டன. எதிர்க்கட்சியும் தமது பொறுப்பை நிறைவேற்றவில்லை. இதனால்தான் மக்கள் தாமாகவே வீதிக்கு இறங்கி ஆட்சியாளர்களை விரட்டியடித்தனர்.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் மொட்டுக் கட்சி இன்னும் அறிவிப்பு விடுக்கவில்லை. 2020 பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட நிலையே அடுத்த தேர்தலில் மொட்டுக் கட்சிக்கும் ஏற்படும் - என்றார். (எ-44)

### 24 மணிநேர நடனம்:

## மலையக இளைஞர்கள் உலக சாதனை

கொழும்பு, செப். 2

24 மணிநேரம் இடைவிடாது தொடர்ச்சியாக நடனமாடி மலையக பெருந்தோட்ட சமூகத்தைச் சேர்ந்த 9 இளைஞர்கள் 'சோழன் உலக சாதனை' புத்தகத்தில் இடம்பிடித்துள்ளனர்.

இந்த நிகழ்வு ஹற்றனிலுள்ள மைதானத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

அன்றையதினம் காலை 8 மணிக்கு நடனம் ஆடத் தொடங்கிய இளைஞர்கள் மறுநாள் வியாழக்கிழமை காலை 8 மணிவரை தொடர்ச்சியாக நடனமாடி சாதனையீட்டியுள்ளனர்.

இந்தச் சாதனையை சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் ஸ்ரீ நாகவாணி ராஜா கண்காணித்தார்.

சாதனைப் படைத்த மலையக நடனக் கலைஞர்களைப் பலரும் பாராட்டி வருகின்றனர். (ச-இ)

## கூட்டணி அமைத்தாலும் சஜித்தான் வேட்பாளர்!

ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டம்



கொழும்பு, செப். 2

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித்தான். கூட்டணி அமைத்தால்கூட இந்நிலைப்பாடு மாறாது என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சமிந்த விஜேசிறி.

அவர் மேலும் கூறுகையில்:

'சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கவே ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு அனுமதிவழங்கியுள்ளது. இந்தநிலைப்பாட்டிலேயே நாமும் உள்ளோம். கூட்டணி அமைப்பதில் நிதானம் தேவை. அரசமைப்பு ரீதியில் உள்ள சூழ்ச்சிகள் பற்றியும் அவதானம் செலுத்தப்படவேண்டும். மொட்டுக் கட்சியினரைத் தாக்கியே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார். இது மொட்டுக் கட்சிகாரர்களுக்குப் புரியவில்லை. ஒரு கட்சியாலேயே மக்கள் போராட்டம் சீரழிக்கப்பட்டது.

அந்தக் கட்சிக்கும் கடந்த காலத்தில் கறைபடிந்த வரலாறே உள்ளது. அந்தக் கட்சியின் செயலால் தான் ரணில் ஜனாதிபதியானார். அதேபோல பதவிகளை இலக்காகக்கொண்டு கூட்டணி அமைப்பதற்கு நாம் எதிர்ப்பு' - என்றார். (ஒ-44)

## சுகாதார அமைச்சிடம் ரூ.13 பில்லியன் நிலுவை

மருந்து இறக்குமதியாளர்களுக்கு 13 பில்லியன் ரூபா நிலுவைத் தொகை செலுத்தப்பட வேண்டியுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதைச் செலுத்துவதற்கு திறைசேரியில் இருந்து நிதி கோரப்பட்டுள்ளதாகவும், நிதியை கட்டம் கட்டமாக விடுவிப்பதற்கு திறைசேரி இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சின் மூத்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார். நிலுவைத்தொகை செலுத்தப்படாமையால் சில மருந்து இறக்குமதியாளர்கள் மருந்துகளை இறக்குமதி செய்வதில் தயக்கம் காட்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இலங்கையில் அத்தியாவசிய மருந்துகளின் பற்றாக்குறை 161 ஆகக் குறைவடைந்துள்ளது என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புஷ்பக 27 வருகிறது திரைக்கு!

காரை சிவ நேசனின் இயக்கத்தில், சத்தியா மெண்டிஸின் திரைக் கதையில் உருவாகியுள்ள ஈழத்தின் முழு நீளத் திரைப் படமான 'புஷ்பக 27' இன்று திரைக்கு வருகின்றது. ராஜா திரையரங்கில் இன்றும் நாளையும் மாலை 4.30 காட்சியாக இந்தத் திரைப்படம் வெளியிடப் படவுள்ளது. இலங்கையின் முதல் விண்வெளித் திரைப் படமாக, கிராபிக் 3டி அனிமேசன் மற்றும் தொழில்நுட்பக் கையாளுகையில் இந்தத் திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)




### வேலையாட்கள் தேவை

* மேசன் (சம்பளம் 2500 )
* பெயின்ரர் ( சம்பளம் 2000 - 2500 வரை )

தொடர்பு : காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை
077 2100 749

### சாரதி தேவை

* ரைக்ரர் சாரதி
( நற்பண்பு உள்ளவராகவும் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்)

தொடர்பு : காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை
077 2100 749

### வேலையாள் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல ஹாட்வெயர் நிறுவனத்திற்கு கணக்காளர் தேவை (ஆண்/ பெண்)
கணினி அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு : 070 640 6905


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 . 11 . 1995

மறைவு 04 . 09 . 2020

### தேவராசா ரதீஸ்வரன்

திதி:- தேய்பிறை திருதியை

இருண்ட நாட்கள் ஓடி மூன்றாண்டுகள் ஆகிறதே!
நீ நடந்த பாதையை நினைக்கும் போது
நெஞ்ச மெல்லாம் கனக்குதடா
எங்கள் உயிர் உள்ளவரை உன்
நினைவு எங்களுடன் இருக்கும்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.92, கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

(CS/26135/AH-1)

## மரண அறிவித்தல்

### வீரசிங்கம் சரஸ்வதி (கிளி)



யாழ். கச்சாய் தெற்கு, அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், 5ம் வாய்க்கால் பரந்தன் மற்றும் பங்களா வீதி, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் சரஸ்வதி (கிளி) கடந்த 08.08.2023 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - பொன்னம்மா தம்பதியினரின் மருமகளும், வீரசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், அருணா (Montréal, Canada), அருள் (Colombo), கருணா (அனுஷா- Brampton, Canada) ஆகியோரின் அன்புத் தாயாரும், இதயகுமார், சர்வமங்களம் (சர்வா), உமாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சப்தவி, விபுஷவி, விதுஷன், அன்விகா, நாவலன் மற்றும் காலஞ்சென்ற ஆதிரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, சதாசிவம் மற்றும் சின்னத்தம்பி, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.09.2023) ஞாயிற்றுக்கிழமை பங்களா வீதி மீசாலையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் 12 மணியளவில் நடைபெற்று சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் 2 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

( )AH-1

வீரசிங்கம்: (077)304-9891, அருள்: (077)304-9887

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 19 . 07 . 1971

இறப்பு 05 . 09 . 2020

அமரர்

### வன்னியசிங்கம் ராஜேஸ்கண்ணா

திதி:- (02.09.2023)

நினைத்துப் பார்க்க முடியாது ஒரு மரணம்
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே – உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்.

கடவாப்புலம் வீதி,
சுன்னாகம்.
077 219 8518

அம்மா, அப்பா, மனைவி,
மகன், சகோதரன்,
சகோதரி குடும்பத்தினர்.
வன்னியசிங்கம் மங்கையர்க்கரசி

(CS/51898/AH-1)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

தோற்றம் 05 . 05 . 1936

மறைவு 06 . 08 . 2023



அமரர்

### இராசக்கோன் விவேகானந்தர்

(இளைப்பாறிய ஆசிரியர் - அச்சுவேலி)

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (03.09.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், **ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு 07.09.2023 வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்திலும்** நடைபெறவுள்ளன. இந் நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அன்னாரின் மாணவர்கள் அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்.

மேலும் எமது குடும்பத்தலைவர் எம்மை விட்டு பிரிந்த வேளை எமது துயரில் பங்கேற்று ஆவன செய்துதவிய அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

தச்சன் தோட்டம்,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

குடும்பத்தினர்

(cs.51917) (N.1)


### வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள களஞ்சியமொன்றுக்கு சாரதி மற்றும் பணியாளர்கள் (ஆண்கள்) தேவை.

077 229 0548
072 429 0548

இல.316, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### வேலையாட்கள் தேவை

* தொழில்நுட்ப உத்தியோகத்தர் (TO)
* கணிய அளவையாளர் (QS) (Experience with Bill and BOQ preparing)
* தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் கணிய அளவையாளர் (Trainee)
* கணக்கு உதவியாளர் (Account Assistant)

தொடர்பு : காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை
077 2100 749
Mail : bestbuilders1983@hotmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ், காணி இல்லை; ஏனையவற்றைப் பகிரலாம்!

## அரசாங்கத்தின் நிலைப்பாடு இதுவே; அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு, செப். 2
பொலிஸ், காணி அதிகாரங்களைத்தவிர ஏனைய அனைத்து அதிகாரங்களையும் மாகாணசபைகளுக்கு வழங்க வேண்டும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் நிலைப்பாடாகும் என்று அமைச்சரும், ஆளுங் கட்சி பிரதம கொறடாவுமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.
அம்பாறை மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தால்தான் என்னால் முதலமைச்சராக செயற்பட முடிந்தது. மாகாண சபைகளுக்கு நிர்வாக அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நான் இருக்கின்றேன். கொழும்பில் கல்வி அமைச்சராக செயற்படுவதன் மூலம் வடக்கு- கிழக்கு மாகாணங்களின் கல்விப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது' - என்றார். (அ-ம-44)

## யாழ். பேருந்து நிலையத்தில் 24 மணிநேர தொடர்பு சேவை

யாழ்ப்பாணம், செப். 2
யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தின் தொடர்பாடல் சேவை இனிவரும் நாள்களில் 24 மணிநேரமும் இயங்கும் என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடமாகாண பிராந்திய முகாமையாளர் ஏ.ஜே.லம்போர்ட் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் தொடர்பாடல் அலுவலகங்கள் இதுவரை இரவு 9 மணியுடன் மூடப்பட்டு வந்தன. இதனால் இரவுப் பொழுதுகளில் உரிய வழிநடத்தல்கள் இல்லாமல் பயணிகள் சிரமப்பட்டனர். இதைக் கருத்திற்கொண்டே தற்போது இந்தச் சேவை 24 மணிநேரச் சேவையாக மாற்றப்பட்டுள்ளது. (அ-ம-26)

### உதயனின் ஊடக அனுசரணையில்

# தென்மராட்சி மெகா பிறீமியர் லீக் நடத்தும் மாவட்ட ரீதியிலான துடுப்பாட்டம் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், செப். 2
உதயனின் இணை அனுசரணை மற்றும் ஊடக அனுசரணையில், தென்மராட்சி மெகா பிறீமியர் லீக் நடத்தும் மாவட்ட மட்டத்திலான மென்பந்து துடுப்பாட்டத் தொடர் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று கோலாகலமாக ஆரம்பிக்கின்றது.
12 அணிகள் இந்தத் தொடரில் கலந்து கொள்கின்றன. அத்துடன், கிரிக்கெட் ஆட்டங்களில் அண்மைக்காலமாக வெற்றிகரமாகப் பரிசீலிக்கப்படும் தாக்க வீரர் (இம்பக்ட் பிளேயர்) முறைமை இந்தத் தொடரில் பயன்படுத்தப்படவுள்ளது. யாழ்ப்பாணத்தில் இந்தத் தொடரிலேயே முதல்முறை இந்த விதிமுறை பின்பற்றப்படவுள்ளது.
உடுவில் ஸ்டைல் போய்ஸ், கொக்குவில் ஸ்டார்ஸ், மட்டுவில் பைட்டர்ஸ், நோத் சுப்பீரியஸ், கொழும்புத்துறை யுனைட்டெட் றொக்கர்ஸ், சுழிபுரம் ரைனோஸ் ஜெப்னா பவர் ஹிட்டர்ஸ், காந்தி நியூ ஸ்ரார் சுன்னாகம், நாவற்குழி பிக் பூட்டர்ஸ், ரீம் ராவணா, கைதடி சூப்பர் கிங்ஸ், வலி. நோத் கிங்ஸ் ஆகிய அணிகள் இந்தத் தொடரில் கலந்துகொள்ளவுள்ளன. (ம)


## உலகை ஆளும் ஊடகத்துறைக்குள் நீங்களும் பிரவேசிக்க விரும்பமா ?




பயிற்சிகள் யாவும் இலவசமாகவே நடத்தப்படும்

### உதயன் ஊடகப் பயிற்சி - 2023

- உங்கள் ஒவ்வொருவரையும் பட்டைதீட்டி ஊடகத்துறையில் மிளிரச்செய்வதற்கு "உதயன்" தயாராகின்றான்.
- உதயனின் இந்தப் பயணத்துடன் கைகோர்க்க உங்களுக்கு விருப்பமா?
- அச்சு, இலத்திரனியல் ஊடகத்துறையின் அடிப்படைகள் மூத்த ஊடகர்கள், பல்கலை விரிவுரையாளர்களால் போதிக்கப்படும்.
- ஒரு மாத காலம் பயிற்சி மற்றும் ஊடகப்பணி தொடர்பான அனுபவங்களைப்பெற முடியும். அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும் மற்றும் பயிற்சி முடிவில் திறமையானவர்களுக்கு வேலைவாய்ப்பிற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.
- 18 - 30 வயதுக்கு இடைப்பட்ட இரு பாலரும் விண்ணப்பிக்க முடியும்.
- பயிற்சிகள் யாவும் யாழ்ப்பாணத்திலுள்ள உதயன் தலைமை அலுவலகத்தில் வார நாட்களில் நடைபெறும்.

உங்கள் சுயவிவரக் கோவையை 10.09.2023 இற்கு முன்னர் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு அல்லது **digital@uthayan.com** மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.


# பொதி வழங்குநர் மீது கொடூரமான தாக்குதல்!

### தாக்கியவர் மறியலில்!

யாழ்ப்பாணம், செப். 2
இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இளவாலை பகுதிக்கு பொதி வழங்கும் சேவையில் பொருள்களை ஒப்படைக்க வந்த இளைஞன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-
பொதி வழங்கும் நிறுவனமொன்றில் பணிபுரியும் ஊழியர் ஒருவர், ஒன்லைனில் பதிவு செய்யப்பட்ட பொருளைக் கொடுப்பதற்காக நேற்று முன்தினம் இளவாலைப் பகுதிக்கு வந்துள்ளார். அவர் குறித்த பொருளை வழங்கிவிட்டு பணத்தைக் கேட்டவேளை, வீட்டினுள் அழைத்துச் சென்று அவர் மீது சரமாரித் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
தாக்குதலுக்கு உள்ளான நபர் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியதையடுத்து, சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டதுடன், அவர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-27)

# வாளுடன் சென்ற இளைஞர் கைது!


யாழ்ப்பாணம், செப். 2
யாழ்ப்பாணம் கட்டுடைப் பகுதியில், வாள் மற்றும் கோடரியுடன் இளைஞர் ஒருவர் நேற்று இரவு மானிப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.
கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலுக்கமைய இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டது. சந்தேகநபருக்கு எதிராக மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-125)

# கரடி தாக்கியதில் ஒருவர் படுகாயம்

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் கரடி தாக்கியதில் குடும்பத்தலைவர் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.
வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் உள்ள காட்டுப் பகுதிக்குச் சென்ற குடும்பத்தலைவரே இவ்வாறு கரடியின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். தாக்குதலுக்கு உள்ளானவர் கண் ஒன்றை இழந்துள்ளதுடன், தலையிலும் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிருடன்தான் இருக்கின்றேன்: வீடியோவில் வந்த பிரிகோசின்



மொஸ்கோ, செப். 2
வாக்நெர் கூலிப்படையின் தலைவர் பிரிகோசின் விமான விபத்தொன்றில் இறந்துவிட்டார் என்று அண்மையில் செய்திகள் வெளியான நிலையில், 'நான் உயிருடன்தான் இருக்கின்றேன்' என்று அவர் வீடியோ ஒன்றில் தெரிவித்திருப்பது சர்ச்சையாகியுள்ளது.

ரஷ்ய இராணுவத்தின் கூலிப்படையாக வாக்நெர் படை செயற்படுகின்றது. கடந்த சில வாரங்களுக்கு முன்னர், ரஷ்ய இராணுவத்துடன் ஏற்பட்ட மனக்கசப்பையடுத்து வாக்நெர் ரஷ்ய அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார். பின்னர் கிளர்ச்சியை பாதியில் கைவிட்டு பெலாரஸ் சென்றார். இந்த நிலையில், அண்மையில் இடம்பெற்ற விமான விபத்தொன்றில் பிரிகோசின் உயிரிழந்துள்ளார் என்று ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இந்த நிலையில் தான் உயிருடன் இருப்பதாகவும், ஆபிரிக்காவில் பயணித்துக் கொண்டிருப்பதாகவும் பிரிகோசின் தெரிவித்துள்ளார். (ம)

# இந்தியாவுக்கு நன்றி

## ரமேஷ் பத்திரண தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 2
இலங்கையினை பல்வேறு வழிகளிலும் நெருக்கடியில் இருந்து வெளிவர உதவிய இந்தியாவுக்கும் அதன் பிரதமர் மோடிக்கும் நன்றிகள் என்று பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்திலிருந்து இலங்கைக்கு தென்னைசார் உற்பத்திகள் கிடைக்கின்றன. இந்த உற்பத்திகளை யாழ்ப்பாணத்திலும் வடக்கு மாகாணத்திலும் அதிகரிக்க நாங்கள் தீர்மானித்துள்ளோம். இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான அத்தனை சாத்தியப்பாடுகளையும் தற்போது செயற்படுத்தி வருகின்றது - என்றார். (ம-125)

எரிபொருள் விநியோகத்துக்காக

# 25ஆம் திகதிக்குள் சினோபெக் வரும்!

கொழும்பு, செப். 2
சீன எரிபொருள் நிறுவனமான 'சினோபெக்' எதிர்வரும் 25ஆம் திகதிக்குள் நாடு பூராகவும் தமது கிளைகளை நிறுவவுள்ளது என்று எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சரான காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'சினோபெக் நிறுவனம் தமது முதலாவது எரிபொருள் நிரப்பு நிலையத்தை ஆரம்பித்துள்ளது. நாடு பூராகவும் 150 நிலையங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்குள் ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன. 12 இடங்களைத்தவிர ஏனைய நிலையங்களின் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், ஆவுஸ்திரேலிய யுனைட்டெட் நிறுவனமும் இவ்வருடத்துக்குள் தனது சேவையை நாட்டில் ஆரம்பிக்கும்' - என்றார். (ம-44)

# உத்தியோகபூர்வ இல்லங்களை மீளப்பெற புதிய சட்டங்கள்

கொழும்பு, செப். 2
பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்த மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளை உத்தியோகபூர்வ இல்லங்களில் இருந்து வெளியேற்றுவதற்காகத் தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தில் மாற்றங்களை செய்ய அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

வீடுகளை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காகப் தற்போது நடைமுறையில் இருக்கும் சுற்றறிக்கையில் மாற்றம் செய்யப்படவுள்ளது. சில மக்கள் பிரதிநிதிகள் தமது பதவிக்காலம் முடிந்தபின்னர், நீண்டகாலம் வீடுகளைப் பயன்படுத்துவதால், அரசுக்குப் பெரும் பணமிழப்பு ஏற்படுகின்றது என்று அரச நிர்வாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சில அரச அதிதகாரிகள் பதவிக்காலம் முடிந்து ஓய்வுபெற்றபோதிலும் அரசியல் அழுத்தங்களைப் பயன்படுத்தி, அந்த வீடுகளில் வசித்து வருகின்றனர். அந்த வீடுகளைப் பராமரிக்கவும் தொடர்ந்தும் புதுப்பிக்கவும் அரசுக்கு பெருந்தொகைப் பணத்தைச் செலவிட நேரிட்டுள்ளது.

இந்த நிலைமை காரணமாகத் தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்தை மாற்றி கடுமையான சட்டத்தை கொண்டுவர அரசு தீர்மானித்துள்ளது. (எ-இ)


## விண்ணக வாழ்வின் ஈராண்டு நினைவினில்

துகளாய்
02
-
03
-
1995




தூபமாய்
02
-
09
-
2021

### அமரர் ஞானப்பிரகாசம் பிரகாஸ்

( சுயாதீன ஊடகவியலாளர் )

" நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன. கடுந்தொல்லை எதுவும் அவர்களை தீண்டாது "
( சா.ஞா.3:7 )



பிரகாஸ்! நீ எம்மை விட்டு சென்று இன்றுடன்
ஈராண்டுகள் ஓடிவிட்டதடா!
எத்தனை ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உன்னை நாம் மறவோம்!
மகனே!! நீ எங்களுடன் தான் இருக்கின்றாய் ..
உன் அக்காவிற்கு மகளாக வந்து பிறந்திருக்கிறாய்..
நாளும் பொழுதும் உன் மருமகளில்
உன் முகம் காண்கின்றோம்..
இந்த பூமியில் வாழும் போது பல கனவுகளுடன்
உயர்ந்த இலட்சிய வாழ்வை நோக்கி பயணித்தாய்..
மகனே!! உன் கனவுகளை நாம்
நிறைவேற்றிவைப்போம் ...
உன் ஆன்மா இறைவனில் இளைப்பாற
இறைவனிடம் வேண்டிநிற்கின்றோம்.

**என்றும் அன்புடன் [illegible]**
**அண்ணன்மார், அக்கா, அத்தான், மருமகள்.**

(CS 26255 M-1)



## மரண அறிவித்தல்

மலர்வு
08
.
03
.
1945



உதிர்வு
30
.
08
.
2023

### சின்னத்தம்பி மதியாபரணம்

வீதி அபிவிருத்தித் திணைக்களம், மற்றும் வனவிலங்குப் பாதுகாப்பு திணைக்களம் (பத்தரமுல்ல) ஆகியவற்றின் ஓய்வு நிலைப் பொறியியலாளரும், கெயர் இன்ர நஷனல் மற்றும் சேவாலங்கா நிறுவனங்களின் முன்னாள் ஆலோசகரும், லயன்ஸ் கழகத்தின் அங்கத்தவரும், சமூகசேவையாளரும்,

யாழ்ப்பாணம் காரைநகரைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மதியாபரணம் அவர்கள் கடந்த (30.08.2023) அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மங்கையற்கரசி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மயில்வாகனம் (முன்னாள் அதிபர், மு/மல்லாவி) அவர்களின் அன்பு மருமகனும், பவானியின் (மணி) அன்புக் கணவரும், இந்திராணியின் அருமைச் சகோதரரும், சுந்தரேசன் (Doctor, லண்டன்), உரோமேசுதன் (சிரேஷ்ட நிறைவேற்று அலுவலர், Varun Beverages Lanka PVT Ltd, கொழும்பு), நேசகாந்தன் உற்பத்தி முகாமையாளர் (அவுஸ்திரேலியா), வாசுகி ஆசிரியை (கனடா), காயத்திரி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயநாதன், காலஞ்சென்ற கருணேந்திரன் (கிராமசேவை உத்தியோகத்தர்), வாணி (செல்வி- பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், இராஜராஜேஸ்வரியின் உடன்பிறவாச் சகோதரரும் தியாகராஜாவின் சகலனும், நிவேதிதா (Doctor, லண்டன்), கங்கா (கொழும்பு), பிரதீபா (அவுஸ்திரேலியா), ரவிசங்கர்(கனடா), ஜெயராகன் (பொறியியலாளர் அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆத்மிகா, அரன், அஸ்விதன், அகரன், பூர்வஜா, பார்கவி, ஷஷாயினி, ஆகியோரின் பாசமிகு பேரனும், தமயந்தி (தாதிய உத்தியோகத்தர்-கொழும்பு), யசோதரன், (நில அளவையாளர், அமெரிக்கா), கிரிதரன் (முகாமைத்துவ உதவியாளர் -கட்டார்), கருணராஜ் (கட்டட ஒப்பந்தகாரர்), கருணதாஸ் முகாமையாளர் (அமெரிக்கா), கருணகாந் (தொழில் நுட்பவியலாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கோவர்த்தனி (மேலதிக முகாமையாளர்-பிரான்ஸ்), கோசலரூபி (கணக்காளர் -பிரான்ஸ்), கேசவன் (தகவல் தொழில்நுட்பவியலாளர் -பிரான்ஸ்) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.09.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் திருநெல்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காகத் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

**'அருளீச்சரம்' பிள்ளையார் வீதி,**
**திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு: **ஈசன், சுதன்: 0702758029, 0767001882**

(CS 26254) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோகர்ண...

இது தொடர்பில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்கத் தூதுவர் உள்நாட்டு விவகாரங்களில் தொடர்ச்சியாகத் தலையிடுகின்றார். இலங்கையின் உள்ளக விடயங்களில் தலையிடுவதை ஜூலி சங் நிறுத்தவேண்டும். இதற்கு உரிய நடவடிக்கைகளை வெளிவிவகார அமைச்சு மேற்கொள்ள வேண்டும். திருக்கேதீஸ்வரர் ஆலயம் 2 ஆயிரத்து 500 ஆண்டு கால வரலாற்றைக்கொண்டது என அமெரிக்கத் தூதுவரால் குறிப்பிடப்பட்டுள்ளது. இதை அவரால் (அமெரிக்கத் தூதுவரால்) ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடியுமா? அவ்வாறு அவரால் நிரூபிக்க முடியாவிட்டால், அமெரிக்கத் தூதுவர் தன் கருத்துக்களுக்காக மன்னிப்புக் கேட்கவேண்டும்.

அத்துடன், இலங்கை இராணுவத்தின் கிளிநொச்சி மாவட்ட கட்டளைத் தளபதியைச் சந்தித்த வேளையில், 'இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு இராணுவத்தினர் - சிறுபான்மையினர் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும்' என்று அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தமையும் பெரும் தவறாகும். நாட்டுக்காகத் தியாகங்களைச் செய்தவர்களிடம் தூதுவர் இவ்வாறு தெரிவிக்க முடியாது. தூதுவர் வியன்னா உடன்படிக்கையை மீறுகின்றார் - என்றார்.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியிடம் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர கடிதமொன்றையும் நேரில் கையளித்துள்ளார். (அ-ம-6)

## மரணச்சடங்கினை...

இலவச சுகாதாரத்தைப் பாதுகாக்கும் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப்போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் பங்கேற்றிருந்தனர்.

சுகாதார அமைச்சருக்கு எதிராக கோஷங்களை எழுப்பியவாறு, மலர்வளையங்களை ஏந்தியபடி பேரணியாக வந்தவர்கள், இலவச சுகாதாரத்தை நாசமாக்க வேண்டாமென உரத்துக் குரல் எழுப்பினர். போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, சவப்பெட்டியொன்று கொண்டுவரப்பட்டது. அதற்கு மேல் சுகாதார அமைச்சரின் கொடும்பாவி வைக்கப்பட்டு, ஒப்பாரி பாடப்பட்டது. இந்தப் போராட்டத்தால் சுகாதார அமைச்சின் வளாகத்தில் பதற்றநிலை ஏற்பட்டது. பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டது. (அ-ம-44)

## திருகோணமலையில்...

ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை மனித சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

விகாரை அமைக்கப்படவுள்ள அமைவிடத்துக்கு அருகாமையில் காலை 9 மணிமுதல் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ-ம-66)

## இந்தியப்...

பயணம் நேற்று இரவு திடீரென ஒத்திவைக்கப்பட்டது.

இந்திய அமைச்சர் இன்று, நாளை என இரண்டு தினங்கள் நாட்டில் தங்கியிருந்து, ஜனாதிபதியும் பாதுகாப்புத்துறை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோருடன் இருதரப்புப் பாதுகாப்புக் குறித்து தீவிரமான ஆலோசனைகளை முன்னெடுப்பதற்கு தீர்மானித்திருந்த நிலையில் நேற்று இரவு இந்தப் பயணம் பிற்போடப்பட்டது.

சீனாவின் ஆய்வுக் கப்பலொன்று இலங்கைக்குள் ஆய்வை மேற்கொள்ள இந்தியா கடும் எதிர்ப்பை வெளியிட்டது. இந்தப் பின்னணியிலேயே இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் பயணமும் அமைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. தற்போது சீனக் கப்பலுக்கு அனுமதி வழங்கவில்லை என்று வெளிவிவகாரத் துறை அமைச்சு அறிவித்துள்ளது. இந்திய அமைச்சர் வந்துசென்ற பின்னர் சீனக் கப்பலின் ஆய்வுகளுக்கு அனுமதி வழங்க இலங்கை வியூகம் வகுக்கின்றதா? என்று கேள்வி எழுப்பப்பட்ட நிலையில், அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## போதகருக்கும்...

கடந்த ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி உதயன் பத்திரிகை அலுவலகத்துக்குள் அத்துமீறி நுழைந்த 20 க்கும் மேற்பட்ட குழுவினர், அலுவலகத்தில் இருந்தவர்களை அச்சுறுத்தும்வகையில் செயற்பட்டனர்.

அச்சுவேலியில் வீடொன்றுக்குள் புகுந்து பெண் ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பத்திரிகையில் வெளியான செய்தி தொடர்பாகவே இந்தக் குழு பத்திரிகை அலுவலகத்துக்குள் புகுந்து அடாவடியில் ஈடுபட்டது. இந்தக் குழு அலுவலகத்தில் இருந்த ஊழியர்களை அச்சுறுத்தியதுடன், அங்கிருந்தவர்களை காணொலி எடுத்தும் பதிவு செய்தது. அதையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்தச்சம்பவத்துடன் தொடர்புடைய 6 பேர் பொலிஸாரால் மறுநாள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் ஏப்ரல் மாதம் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். பின்னர் அவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டது. இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. உதயன் பத்திரிகை நிறுவனம் நட்டஈடு எதுவும் கோராத நிலையில், நீதிமன்றம் கடும் எச்சரிக்கை செய்து, தலா ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்து, அவர்களை விடுவித்தது. (அ-எ)

## நல்லூர்...

வித்தியாலய மைதானத்தில் புற்றுநோயை ஆரம்பத்தில் கண்டறியும் மையமும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையும் இணைந்து 'உதயன்' ஊடக அனுசரணையுடன் இந்த சுகாதாரத் திருவிழாவை ஏற்பாடு செய்துள்ளன.

எதிர்வரும் 15ஆம் திகதிவரை தினமும் மாலை 5 மணிமுதல் 9 மணிவரை 'சுகாதாரத் திருவிழா' நடைபெறும். அதிநவீன மருத்துவப் பரிசோதனைகளும், மருத்துவ நிபுணர்களால் மருத்துவ ஆலோசனைகளும் இலவசமாக இங்கு வழங்கப்படவுள்ளன.

கண்களை ஸ்கான் செய்து செயற்கை நுண்ணறிவுப் பகுப்பாய்வால் புற்றுநோயைக் கண்டறியும் தொழில்நுட்பம் இங்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இந்தத் தொழில்நுட்பம் ஆசிய நாடுகளில் முதன்முறையாக இங்கு அறிமுகப்படுத்தப்படுகின்றது.

புற்றுநோய் மருத்துவம், நீரிழிவு மருத்துவம், உணவு மற்றும் ஊட்டச்சத்து மருத்துவம், விளையாட்டு மருத்துவம், போதைப் பொருள் பழக்கத்தில் இருந்து விடுபடுதல் போன்ற விவரணக் கலந்துரையாடல்களும் தினமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அத்தோடு தினமும் கலை நிகழ்வுகளும், விழிப்புணர்வு நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பொதுமக்கள் இந்த சுகாதாரத் திருவிழாவில் கலந்துகொண்டு பயனடையவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (அ-எ)

## சிங்கப்பூரின்...

தர்மன் சண்முகரத்தினம் சிங்கப்பூர் நாட்டின் நிதி அமைச்சராகவும், துணைப் பாதுகாப்பு அமைச்சராகவும் துணைப் பிரதமராகவும் பதவி வகித்த நிலையில் தற்போது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

செல்லுபடியான மொத்த வாக்குகளில் 70.40 வீதமான வாக்குகளை அவர் பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## கனடா...

தைச் சேர்ந்த முகவர் ஒருவரே இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளார். போலியான விசாவொன்றைத் தயாரித்து மேலதிகமாக சில இலட்சங்களை அவர் கோரிய போது விழிப்படைந்த குடும்பத்தினர் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர். சந்தேகநபரைக் கைதுசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-26)

## பஸ்ஸோடு...

ஏற்பட்டுள்ளது. திருகோணமலையில் இருந்து நேற்று பிற்பகல் 3.45 மணிக்குப் பயணத்தை ஆரம்பித்த பேருந்து மாங்குளத்துக்கும் முறிகண்டிக்கும் இடைப்பட்ட பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நல்லவேளையாக சில்லுகள் கழன்றதை உடனடியாக நடத்துநரும், சாரதியும் கண்டறிந்து, பேருந்தை பாதுகாப்பாக நிறுத்தியதால், பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. இதையடுத்து, பேருந்து நீண்டநேரம் பழுதுபார்க்கப்பட்டு அதன் பின்னரே பயணிகள் பயணத்தைத் தொடர்ந்தனர். (அ-ம)

## மட்டக்களப்பு...

அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'கடன்களைச் செலுத்தும் மற்றும் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் முடிவுற்றதும், தெற்கைப் போன்று வடக்கு - கிழக்கு அபிவிருத்தியில் அரசாங்கம் கவனம் செலுத்தவுள்ளது. மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம் வரை புதிய ரயில் சேவையை ஆரம்பிக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் புதிய ரயில்களைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் பேச்சுக்களை முன்னெடுத்து வருகிறது. பேச்சுக்கள் வெற்றியளித்தால் அடுத்த வருடம் மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்படும்' - என்றார். (அ-ம)

## காசோலை...

இரண்டு பேர் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றத்தடுப்புப்பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சம்பவங்கள் தொடர்பில் தெரியவருவதாவது:-

லண்டனில் இருந்து மூன்று வார விடுமுறையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஒருவரிடம் உரும்பிராயைச்சேர்ந்த நபரொருவர் 72 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளார். பின்னர் அவர் அந்தப் பணத்துக்குப் பதிலாக காசோலையை வழங்கியுள்ளார். எனினும் காசோலை பணமின்றித் திரும்பியுள்ளது. தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த லண்டன்வாசி இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார். இதையடுத்து காசோலையை வழங்கிய நபர் கைதுசெய்யப்பட்டார்.

இதைவிட, வர்த்தக நிறுவனம் ஒன்றிடமிருந்து 18 இலட்சம் ரூபாவுக்குப் பொருள்களைப் பெற்ற நபர் ஒருவர் காசோலையை வழங்கியுள்ளார். அந்தக் காசோலை பணமின்றித் திரும்பியுள்ளது. இது தொடர்பிலும் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவர் யாழ்ப்பாணம் நீதிமன்றுக்கு அருகாக வைத்து நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். (அ-ம-26)

## எரிவாயுவின்...

நிறுவனம் நேற்றுத் தெரிவித்துள்ளது. விலைச் சூத்திரத்தின்படியே இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளபோதிலும், விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளதா? அல்லது விலைக்குறைப்புச் செய்யப்படவுள்ளதா? என்று தெளிவாகக் குறிப்பிடவில்லை. (அ-ம)

## கியூ.ஆர்....

நீக்கப்படுவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில், எரிபொருளுக்கு நாட்டில் கடும் தட்டுப்பாடு நிலவியது. இதையடுத்து நாட்டில் பெரும் போராட்டங்கள் வெடித்தன. ரணிலின் ஆட்சிக்காலத்தில் எரிசக்தி அமைச்சராக காஞ்சன விஜயசேகர நியமிக்கப்பட்டதையடுத்து கியூஆர். முறைமை கொண்டு வரப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் நாட்டில் நிலவிய எரிபொருள் பற்றாக்குறை சடுதியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதுடன் சீரான விநியோகத்தையும் உறுதிப்படுத்த முடிந்தது. தற்போது இந்த முறைமையை அரசாங்கம் நீக்கியுள்ளது. (அ-ம-44,17)

## உழவியந்திரம்...

பகுதியில், உழவியந்திரம் ஒன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் சிறுவன் ஒருவன் நேற்று உயிரிழந்தான். ச.சதுசன் (வயது-14) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவனாவான். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

மடுக்குளம் பகுதியில் உள்ள குளத்தின் அணைக்கட்டில் மணல் ஏற்றியவாறு உழவியந்திரம் ஒன்று பயணித்துள்ளது. திடீரெனக் கட்டுப்பாட்டை இழந்த உழவியந்திரம் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது. விபத்தில், உழவியந்திரத்தில் அமர்ந்து பயணித்த சிறுவன் படுகாயமடைந்து பூவரசன்குளம் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டான். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டபோதிலும் சிகிச்சை பயனளிக்காமல் சிறுவன் உயிரிழந்தான். இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-110,18,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைக்காலத்தில் வாகன இறக்குமதி

## பறிமுதல் செய்ய ஆலோசனை

கொழும்பு, செப். 2

இறக்குமதி தடைக்காலத்தில் சட்டவிரோதமாக ஆயிரக்கணக்கான வாகனங்களை நாட்டுக்கு இறக்குமதி செய்தமை தொடர்பில் இலங்கை சுங்கத் திணைக்களத்திடம் இருந்து விரிவான அறிக்கையை நிதியமைச்சு கோரியுள்ளது.

2020ஆம் ஆண்டு மார்ச் முதல், இலங்கை தனது வெளிநாட்டு நாணயக் கையிருப்பை நிர்வகிப்பதற்காக வாகன இறக்குமதிக்குத் தடை விதித்திருந்தது.

இறக்குமதித் தடைக்காலத்தில் சட்டவிரோதமான முறையில் 5 ஆயிரம் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டதாக அண்மைய ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த விடயம் தொடர்பில் பதிலளித்த நிதி இராஜாங்க அமைச்சர், இறக்குமதியாளர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவ்வாறான வாகனங்கள் இருந்தால் பறிமுதல் செய்யப்படும் எனவும் தெரிவித்தார். தடைக்காலத்தில் இவ்வாறான வாகனங்களை இறக்குமதி செய்தமை தொடர்பில் தமக்கு எந்தவித அறிக்கையும் கிடைக்கவில்லை என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும், ஊடகங்களில் வெளியான செய்திகள் 2015ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலானது எனவும் அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதேவேளை - 2020ஆம் ஆண்டு தடை விதிக்கப்பட்டதிலிருந்து சுமார் 6 ஆயிரத்து 900 வாகனங்களை அரசாங்கம் விசேட நோக்கங்களுக்காக இறக்குமதி செய்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் வெளிப்படுத்தினார்.

இவற்றில் பெரும்பாலான வாகனங்கள் பொலிஸாருக்காகக் கொள்வனவு செய்யப்பட்டன. தூதரக நோக்கங்களுக்காகவும் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. சட்டத்துக்குப் புறம்பாக இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் வழமையான நடைமுறைகளின்படி பறிமுதல் செய்யப்படும் என அமைச்சர் வெளிப்படுத்தினார்.

இறக்குமதித் தடை காலத்தில் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால், கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த சட்டவிரோத இறக்குமதிகள் பொருளாதார நெருக்கடிக்கு வழி வகுத்துள்ளன. மேலும் இந்த விடயத்தை முழுமையாக ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உறுதியாக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (ஓ-இ)

## ஜி - 20 மாநாட்டை

# ரஷ்யா, சீனா புறக்கணிக்கும்

கொழும்பு, செப். 2

இந்தியாவில் எதிர்வரும் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் நடைபெறும் ஜி - 20 அரச தலைவர்கள் உச்சி மாநாட்டை சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தவிர்க்கக் கூடும் என இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீன ஜனாதிபதிக்குப் பதிலாக அந்நாட்டுப் பிரதமர் இந்த மாநாட்டில் பங்கேற்கக்கூடும் எனவும் தெரியவருகின்றது. எனினும், இது தொடர்பில் அதிகாரபூர்வ மாக எந்தவிதத் தகவலும் வெளியாகவில்லை.

ஜி - 20 மாநாட்டில் பங்கேற்கப்போவதில்லை என ரஷ்ய ஜனாதிபதி அறிவிப்பு விடுத்திருந்த நிலையில், சீன ஜனாதிபதியும் மாநாட்டைத் தவிர்க்கும் முடிவை எடுத்திருப்பது இராஜதந்திர வட்டாரங்களில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

டில்லியில் நடைபெறும் ஜி - 20 உச்சி மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி பங்கேற்பது உறுதியாகியுள்ளது.

உலகின் இரு பலம்பொருந்திய பொருளாதார நாடுகளின் ஜனாதிபதிகள் ஜி - 20 மாநாட்டில் சந்தித்துப் பேசுவார்கள் என அது தொடர்பில் உலகின் கவனம் திரும்பியிருந்தது.

இந்தநிலையில் அமெரிக்க ஜனாதிபதியுடனான சந்திப்பை தவிர்க்கவே சீன ஜனாதிபதி இந்த முடிவை எடுத்திருக்கலாம் எனத் தெரியவருகின்றது. (ஓ-44)

### பண மோசடியில் ஈடுபட்ட நபருக்கு விளக்கமறியல்!

கனடா அனுப்புவதாகக்கூறி வவுனியாவில் பண மோசடியில் ஈடுபட்ட நபரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டது.

வவுனியாவின் பட்டக்காடு, திருநாவற்குளம், தவசிகுளம், மல்லாவி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 6 நபர்களிடம் கனடா அனுப்புவதாகக் கூறி யாழ்ப்பாணம், நாவற்குழி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் பணம் பெற்று ஏமாற்றியிருந்தார். இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்தனர். இதையடுத்து யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியைச்சேர்ந்த 41 வயதுடைய சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில், அவரை 14 நாள்கள் மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. (ம-18)


**தேவை**

காணி மீள் நிரப்ப இடிபாட்டு மண் தேவை. (CS-51031) AH-1

076 159 6912 - சாவகச்சேரி

**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் கடை ஒன்றுக்குப் பெண் வேலையாட்கள் தேவை.
(பகுதி நேரம் / முழுநேரம்)
சம்பளம் - 10,000/= - 35,000/= வரை
077 791 4221

**மணமகன் தேவை**

1985 இல் பிறந்த கனடாவில் வசிக்கும் படித்த, தொழில் செய்யும் யாழ்.இந்து (V) மணமகளுக்குப் படித்த (University or College) மணமகன் தேவை.
Whats app - 001 416 2878164, 001416 788 5265

**வேலையாட்கள் தேவை**

பூங்கன்றுகள் விற்பனையாளர் மற்றும் பராமரிப்பாளர் 3 வேலையாட்கள் தேவை. (ஆண்/பெண்)
தொடர்பு:
075 9444 601

**சமையலாள் தேவை**

யாழ். நகரில் தனியார் நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு சமையல் செய்யக் கூடிய ஒருவர் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.
சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இன்றும் நாளையும் நேரில் சமுகமளிக்கவும்.
இல.55, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
077 277 7779
(CR 40060)AH-1

**Happy Supermarket - உரும்பிராய்**



அங்கர், யோக்கட் சில்லறை மற்றும் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்.
பலாலி வீதி, உரும்பிராய்ச் சந்தி.
077 121 5548

**காணி விற்பனைக்கு**

பளை நகரில் புலோப்பளையில் உள்ள காணியொன்றும் வயல்காணியும் விற்பனைக்குண்டு.
077 932 5343

**வாடகைக்கு**

206/2, ஸ்ரான்லி றோட்டில் அமைந்துள்ள 2400 சதுர அடி கொண்ட கட்டடம் வாடகைக்கு விடப்படும்.
(CDB வங்கிக்கு மேல் உள்ளது)
077 360 9005

**உடனடி வேலைவாய்ப்புகள்**

- **Accounts Clerk** 3 வருட அனுபவமுள்ள பெண் ஊழியர் தேவை.
- **Typesetter** (தமிழ், ஆங்கிலம்) 3 வருட அனுபவமுள்ள ஆண்/ பெண்.
- **Sales & Marketing** முன்னனுபவமுள்ள ஆண் ஊழியர் தேவை.

K.V. Printers Books Distributing Centre
386, Clock tower road, Jaffna.
075 878 2924, 021 720 0237, 077 878 2924
(CS/26118)AH-1

**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் சுப்பர்மார்க்கட்டுக்கு வேலையாட்கள் தேவை.
**காசாளர்** - கணினி தெரிந்தவர்கள் (பெண்கள்)
**பொதி செய்பவர்கள்** - பெண்கள்
தொடர்பு: 077 355 1631
T.T.R.Supermarket
85,87, Rakka Road, Jaffna.

**வீடு வாடகைக்குத் தேவை**

3 பேர் கொண்ட விரிவுரையாளர் குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை.
(யாழ். நகரப் பகுதியிலிருந்து 4km இற்குள்)
021 222 0446, 076 167 0634

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோயில் முன்பாக **33 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு.
- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்.
- நகுலேஸ்வரர் மகாவித்தியாலயத்தில் இருந்து 250 m மீற்றர் தூரம். நகுலேஸ்வரர் ஆலயம் 50 m மீற்றர் தூரம். பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m மீற்றர் தூரம்.
- செம்மண்கான் நன்னீர் ஊற்றுநிலம். வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம். நல்ல சூழல்.
- 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.

**நிலப்பரப்பு**
**பார்வையிடும் நேரம் :-**
காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை
தொடர்பு:- குரு 076 755 8606, 077 8743 204, 077 2880 152.

**விற்பனைக்கு**

கோழிப்பண்ணை அமைப்பதற்கான ஒரு வருடமே பாவனையில் இருந்த பொருட்கள் விற்பனைக்குண்டு. 70'அடி நீளமும் 40' அடி அகலமும், 2750, கோழிகள் வளர்ப்பதற்குரிய பொருட்கள் அனைத்தும் முழுவதுமாக வாங்கும் ஒருவருக்கே விற்கப்படும்.

இப் பொருட்களைக் கொண்டு கோழிப்பண்ணை, Tution Centre அல்லது களஞ்சியங்கள் அமைக்க உதவும்.

தகரம், தண்ணீர்த் தொட்டி, Stand, Security Cameras, Water Pump, அரி கற்கள், கூடுக்குரிய நெற்கள், கோழித் தீவனம், தண்ணீர் வைக்கும் கொள்கலன்கள் மற்றும் எல்லாப் பொருட்களும் ஒருவருக்கே விற்கப்படும்.

**தேவை உள்ளவர்கள் மட்டும் அழைக்கவும்.**

இடம் : யாழ்ப்பாணம்
தொடர்பு : குமார் - 077 392 0797

**நீர்க்கசிவைத் தடுப்பதற்கு**

உங்கள் புதிய பழைய கட்டடங்கள், கோவில், வில்லு மண்டபங்கள், கொங்கிறீட் சிலப்புகள் அனைத்திற்குமான நீர் கசிவை தடுப்பதற்கும் மற்றும் வீடுகளில் ஏற்படும் வெடிப்புகளை உத்தரவாதத்துடன் சீர்செய்தும் தருவோம். நீங்களும் இரசாயன பொருட்களை பெற்றும் சீர்செய்யலாம். முதன் முதலில் வடமாகணத்தில் அறிமுகம் செய்தவர்கள் கொங்கிறீட் பாறைகள், சுண்ணாம்பு பாறைகள் லேசாக உடைப்பதற்கான இரசாயனத்தையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
10 வருட உத்தரவாதம் உண்டு. உலகத்தரம் மிக்க கட்டட இரசாயனப் பொருள்களின் Finex ஸ்தாபனத்தாரின் வட மாகாண ஏக விநியோகத்தர்கள் விஷேட விலைக்கழிவு உண்டு.
போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்
North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மின்னஞ்சல்: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.